**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 83 of 2026**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | :திருமதி. தனலெட்சுமி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.24.07.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2026 ம் தேதி நானும், தலைமை காவலர் 1400 ஆசியா, தமிழரசி 1122 தலைமை காவலர், என்பவருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ராஜா என்கிற மீசை ராஜா த/பெ. ஆறுமுகம், பெரியார் நகர், மேலவாளாடி, இலால்குடி தாலுக்கா என்பவர் அவரது வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்கள் வைத்திருந்தவர், எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து நான் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். அவரை நான் காலை 07.20 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் உடன் வந்த காவலர்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்களை

காலை 07.40 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உடன் வந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய Express பிராந்தி 55 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து உடன் வந்த காவலர்கள் முன்னிலையில் காலை 08.00 மணியளவில் 55 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்து உடன் வந்த காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரியுடன் காலை 08.45 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 5/2026 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7/அ.சா.3** ஆகும். மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

ரோந்து பணி சென்றது குறித்து பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டேனா என்றால் குறிப்பிட்டேன். நான் ரோந்து பணிக்கு அரசு வாகனத்தில் சென்றேனா அல்லது எனது சொந்த வாகனத்தில் சென்றேனா என்றால் அரசு வாகனத்தில் சென்றேன். தனி நபர் சாட்சிகளை புகார் கொடுக்க அழைத்தேனா என்றால் அழைத்தேன் முன்வரவில்லை. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. இந்த வழககில் மாதிரி வரைபடம் தயார் செய்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை ஏன் காலத்தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் குற்ற இறுதி அறிக்கையுடன் அனுப்பப்பட்டதால் காலத்தாமதம் ஏற்பட்டது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்களின் மதிப்பு

எவ்வளவு என்றால் சுமார் ரூ. 5000/- இருக்கும். இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு எதிரிக்கு எதிராக பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.24 16:43:23 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி